# **2021/06** சுற்றறிக்கைக்கு அமைவாக பாட ஒதுக்கீடுகள்

------------------------------

* விசேட கல்விக்கான ஆசிரியர்கள்

விசேட கல்வி அலகுகள் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு விசேடமாகப் பயிற்றுவிக்கப் பட்டவர்கள் **5:1** என்ற அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

* மாணவர் ஆலோசனைப் பணிக்கான ஆசிரியர்கள்

**300** மாணவர்களுக்கு மேலுள்ள பாடசாலைகளில் ஆலோசனைப் பணிக்காக ஒரு ஆசிரியரை விடுவிக்க முடியும்.
**300** மாணவர்களுக்குக் குறைவாயின்
**10** மணித்தியாலங்கள் **(15**பாட வேளைகள்**)** விடுவித்துப் பயன்படுத்தலாம்.

* நூலகச் செயற்பாடுகளுக்கான பொறுப்பாசியர்.

நூலகம் ஒன்றுடன் கூடிய பாடசாலையாயின் நூலக நடவடிக்கைகளுக்காக ஒரு ஆசிரியரை விடுவித்துப் பயன்படுத்தலாம்.

மாணிக்கம்.இளங்கோ
**MEd**

## 2021/06 சுற்றறிக்கைக்கு அமைவாக
## பாட ஒதுக்கீடுகள்

-------------------------------

* மேற்பார்வை ஆசிரியர்கள்

**2021/06** சுற்றறிக்கையில் பகுதித் தலைவர்கள் என்ற பதம் நீக்கப்பட்டு மேற்பார்வை ஆசிரியர்கள் என்ற பதம் சேர்க்கப்பட்டுள்ளது.

* ஆரம்பப்பிரிவு **(1---5)** மேற்பார்வை ஆசிரியர்களாக ஒதுக்கீடு இல்லை அவ்வாசியர்களே செயற்பட வேண்டும்

### இடைநிலைப் பிரிவு (6-----11) மேற்பார்வை ஆசிரியர்கள்

9.2 இரண்டாம் நிலை பிரிவு (தரங்கள் 6-11) தொடர்பான மேற்பார்வை ஆசிரியர்கள்

| 6-11 தரங்களில் பதிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | இருக்க வேண்டிய மேற்பார்வை ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1000 – 1500 | 1 |
| 1501 - 3000 | 2 |
| 3001 - 5000 | 3 |
| 5000 க்கும் மேலாக | 4 |
| இந்த மேற்பார்வையாளர்கள் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்கு 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடவேளைகள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். | |

மேற்பார்வை ஆசிரியர்கள் தமது வருடாந்தப் பணித் திட்டங்களை அதிபரிடம் அனுமதி பெறவேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
**MEd**

# 2021/06 சுற்றறிக்கைக்கு அமைவாக பாட ஒதுக்கீடுகள்

-------------------------------

## உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கான மேற்பார்வை ஆசிரியர்கள்

9.3 க.பொ.த. (உயர் தர) (தரங்கள் 12-13) தொடர்பான மேற்பார்வை ஆசிரியர்கள் (சகல பிரிவுகள் தொடர்பாகவும்)

| உயர் தர (12-13 தரங்களின்) மாணவர் எண்ணிக்கை | 1 பாடநெறி மட்டும் இருக்கும் போது | 2 பாடநெறிகள் மட்டும் இருக்கும் போது | 3 பாடநெறிகள் அல்லது அதற்கு மேலான சந்தரப்பங்களில் |
|---|---|---|---|
| 100 மற்றும் அதற்கு கீழ் | 0 | 0 | 0 |
| 101-210 | 0 | 1 | 1 |
| 211-480 | 1 | 1 | 1 |
| 481-960 | 1 | 2 | 2 |
| 960 க்கும் மேலாக | 1 | 2 | 3 |
| இந்த மேற்பார்வையாளர்கள் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்கு 40 நிமிடங்களைக் கொண்ட 16 பாடவேளைகள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். | | | |

மேற்பார்வை ஆசிரியர்கள் தமது வருடாந்தப் பணித் திட்டங்களை அதிபரிடம் அனுமதி பெறவேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
MEd

# 2021/06 சுற்றறிக்கைக்கு அமைவாக பாட ஒதுக்கீடுகள்

-----------------------------

## பிரதி அதிபர்,உதவி அதிபர்கள் நியமனமும் பாட ஒதுக்கீடும்

**11. இருக்க வேண்டிய உதவி அதிபர்களின் எண்ணிக்கை**

| பாடசாலையின் தன்மை | 1-5 ஆரம்ப பிரிவிற்கான உதவி அதிபர்களின் எண்ணிக்கை | இரண்டாம் நிலை பிரிவிற்கான உதவி அதிபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தரங்கள் 1-5 ஆரம்ப பிரிவில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 500க்கும் அதிகமான மற்றும் தரங்கள் 6-11 இரண்டாம் நிலைப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 200 க்கும் அதிகமான என்ற இரண்டு நிலைமைகளையும் பூர்த்தி செய்யப்படும் பாடசாலைக்கு | 02 | |
| தரங்கள் 6-11 இரண்டாம் நிலைப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 500க்கும் அதிகமான மற்றும் உயர் தர மாணவர் எண்ணிக்கை 100க்கும் அதிகமான என்ற இரண்டு நிலைமைகளையும் பூர்த்தி செய்யும் பாடசாலைக்கு | | 02 |
| ஏதேனும் பாடசாலை மேற்குறித்த இரண்டு நிலைமைகளுக்கும் உரியதெனில், அந்த இரண்டு சந்தர்ப்பங்களின் கீழும் உதவி அதிபர்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த உதவி அதிபர்கள் இலங்கை அதிபர் சேவையின் கீழ் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கையாகக் கருதப்பட வேண்டும்.<br>உதவி அதிபர்கள் ஒரு வாரத்திற்கு 40 நிமிட பாடவேளைகள் 12 இல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். | | |


மாணிக்கம்.இளங்கோ

**MEd**

## 2021/06 சுற்றறிக்கைக்கு அமைவாக பாட ஒதுக்கீடுகள்

--------------------------------

## பிரதி அதிபர்,உதவி அதிபர்கள் நியமனமும் பாட ஒதுக்கீடும்

12. **பிரதி அதிபர்களின் எண்ணிக்கை**

| பாடசாலையின் தன்மை | பிரதி அதிபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் தர மாணவர் எண்ணிக்கை 300க்கும் அதிகமான, 6-11 இரண்டாம் நிலைப் பிரிவின் மாணவர் எண்ணிக்கை 500க்கும் அதிகமான மற்றும் 1-5 ஆரம்பப் பிரிவின் மாணவர் எண்ணிக்கை 500க்கும் அதிகமான, மொத்த மாணவர் எண்ணிக்கை 2000த்திற்கும் அதிகமான பாடசாலைகள் | 03 |
| மேற்கண்ட பிரிவினுள் அடங்காத உயர் தர மாணவர் எண்ணிக்கை 150க்கும் அதிகமான மற்றும் 6-11 இரண்டாம் நிலைப் பிரிவில் மாணவர் எண்ணிக்கை 800க்கும் அதிகமான, மொத்த மாணவர் எண்ணிக்கை 1500க்கும் அதிகமான பாடசாலைகள் | 02 |
| மேற்கண்ட இரண்டு பிரிவுகளிலும் அடங்காத, எனினும் மொத்த மாணவர் எண்ணிக்கை 400க்கும் அதிகமான பாடசாலைகள். | 01 |
| இந்த பிரதி அதிபர்கள் இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் கீழ் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கையாகக் கருதப்பட வேண்டும். பிரதி அதிபர்கள் ஒரு வாரத்திற்கு 40 நிமிடங்கள் கொண்ட 10 பாடவேளைகளையாவது கற்பிக்கும் பணியில் ஈடுபட வேண்டும். இருப்பினும் 3000க்கும் அதிகமான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலையில் இரண்டு பிரதி அதிபர்களும், மாணவர் எண்ணிக்கை 2000-3000க்கு இடைப்பட்ட பாடசாலைகளில் ஒரு பிரதி அதிபரும் கற்பித்தல் பணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு முழுநேர நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படலாம். | |



மாணிக்கம்.இளங்கோ
**MEd**

# 2021/06 சுற்றறிக்கைக்கு அமைவாக பாட ஒதுக்கீடுகள்

-------------------------------

## கற்பித்தலில் ஈடுபடவேண்டிய குறைந்தபட்ச காலம்.

**10. கற்பித்தலில் ஈடுபட வேண்டிய குறைந்தபட்ச காலம்**

10.1 ஒரு ஆசிரியர் சேவைபுரிய வேண்டிய பாடவேளைகளின் எண்ணிக்கை ஒரு வாரத்திற்கு 40 பாடவேளைகளாகும். அதில் செயற்பாட்டு விடுப்புகளைத் தவிர ஆசிரியர் ஒருவர் பாடம் சார்ந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் குறைந்தபட்சம் 30 பாடவேளைகள் ஈடுபடவேண்டும்.

எஞ்சிய பாடவேளைகளைப் பாடசாலை மட்ட மதிப்பீட்டைத் திட்டமிடுதல், பாடங்களைத் திட்டமிடுதல், அப்பியாசக் கொப்பிகளைப் பார்த்தல், மேலதிக கற்பித்தல் ஒழுங்கமைப்பு, கணிப்பீடுகளை மதிப்பிடுதல் மற்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் அபிவிருத்தி போன்ற அதிபரால் வழங்கப்படும் ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்தல் வேண்டும்.

10.2 பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளராகப் பணிபுரியும் ஆசிரியரின் கற்பிக்கும் பாடவேளைகளின் எண்ணிக்கைகளை 10 பாடவேளைகளால் விடுவிக்க வேண்டும்.

10.3 பாடசாலை நேர அட்டவணையில் கற்பித்தலுக்காக இந்த குறைந்தபட்ச 30 பாடவேளைகளைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள், விளையாட்டு, அழகியல் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் பொறுப்பை ஏற்று அதற்காக விசேட வருடாந்தத் திட்டமொன்றைத் தயாரித்து வருடாந்த நேர அட்டவணையுடன் அனுமதி பெறவேண்டும்.

மாணிக்கம்.இளங்கோ
MEd